இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 308 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 05 – வெள்ளிக்கிழமை 19 ஜூன் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 308 : Thiruvalluvar Year - 2057 - Aani 05 - Friday 19 June 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00



தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் ஆற்காடு வீராசாமியின் பேரனும், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமியின் மகனுமான சித்தார்த்தின் திருமணம் சென்னை வானகரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நிகழ்ச்சியில், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்கள் வி.கே.சித்தார்த், எஸ்.ஆஷ்ரயா காயத்ரியின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி, சிறப்புரையாற்றினார். இதில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், திருமதி துர்கா ஸ்டாலின், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி., ஆ.இராசா எம்.பி., முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, அன்பில் மகேஸ் பொய்யா மொழி உள்பட முன்னாள் அமைச்சர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற – நாடாளுமன்ற முன்னாள் – இந்நாள் உறுப்பினர்கள், கழக முன்னணியினர் கலந்துகொண்டனர்.

### நாட்டில் நடைபெறும் அக்கிரமங்களெல்லாம் செய்திகளாக வந்துகொண்டிருக்கின்றன – அவைகளைப் படித்தாவது

# முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## ஆர்க்காட்டார் இல்ல மணவிழாவில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜூன் 19-**

**“நாட்டில் நடைபெறும் அக்கிரமங்கள் எல்லாம் செய்திகளாக வந்துகொண்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் படித்து முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் கழகப் பொருளாளர் ஆர்க்காட்டார் இல்லத் திருமணவிழாவில் பங்கேற்று உரையாற்றும்போது வலியுறுத்தினார்.**

சென்னை - வானகரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற, கழக உயர்நிலைச் செயல்திட்டக்குழு உறுப்பினர் ஆர்க்காடு நா.வீராசாமி அவர்களது பெயரனும் - கழக அயலக அணித் தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி. அவர்களது மகனுமான வி.கே.சித்தார்த் - எஸ்.ஆஷ்ரயா இணையரின் திருமணத்தை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார்.

இந்நிகழ்வில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -

ஆற்றலுக்கும் கொள்கைப் பிடிப்புக்கும் இலக்கணமாக விளங்கிக் கொண்டிருக்கும் நம்முடைய மதிப்பிற்குரிய ஆருயிர் அண்ணன் ஆர்க்காட்டார் அவர்களின் இல்லத்தில் இந்த இனிய விழாவில் பங்கேற்று அவர்களுடைய பேரனும், நம் பாசத்திற்குரிய வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி அவர்களுடைய அருமை மகனுமான வி.கே. சித்தார்த் அவர்களுக்கும் ஆஷ்ரயா அவர்களுக்கும், இந்த மணவிழா நிகழ்ச்சியை நான் நடத்தி வைத்து, அதே நேரத்தில் மணமக்களை வாழ்த்தும் ஒரு சிறப்பான வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.



அறிஞர்அண்ணாமீதுபற்றுகொண்டு, அவரைத் தொடர்ந்து நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் மீது அன்பு கொண்டு அண்ணன் ஆர்க்காட்டார் அவர்கள் இந்த இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, இன்றளவும் இந்த இயக்கத்திற்கு விசுவாசமாக - துணை

## கழகத்தின் வைரம் பாய்ந்த தொண்டர் ஆர்க்காட்டார்!

யாக ஆலோசகராக எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

துவக்க காலத்தில் அண்ணன் ஆர்க்காட்டர் அவர்கள் மின் துறையில் ஒரு ஊழியராகப் பணியாற்றி, அதற்குப் பிறகு அந்த மின்சாரத் துறையின் அமைச்சராக பொறுப்பேற்கும் அளவிற்கு உயர்ந்து, அவர் இந்த இயக்கத்திற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். ‘புலிக்குப் பிறந்தது பூனையாகுமா!’ என்ற பழமொழிக்கேற்ப, அண்ணன் ஆர்க்காட்டார் அவர்களின் அருமை மகன் நம்முடைய டாக்டர் கலாநிதி அவர்கள், இன்றைக்குக் கழகத்தின் வளர்ச்சிக்கு, தலைமைக் கழகம் என்ன பணியிட்டாலும்; கழகம் எந்த உத்தரவு வழங்கினாலும், அதை சிரமேற்கொண்டு பணியாற்றும் ஒரு ஆற்றல்மிக்க செயல் வீரராக நம்முடைய கலாநிதி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தொலைக்காட்சி விவாதங்களில் பங்கேற்பதாக இருந்தாலும் சரி; நம்முடைய கனிமொழியும், டி.ஆர்.பாலுவும் சொன்னது போன்று, நாடாளுமன்றக் கூட்ட விவாதங்களில் பங்கேற்பதாக இருந்தாலும், மிகச் சிறப்பாக அந்தப் பணியை நிறைவேற்றுகிற ஒரு மக்கள் சேவகராக அவர் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

### நமக்கெல்லாம் துணையாக இருப்பவர் ஆர்க்காட்டார்!

இங்கே தம்பி உதயநிதி பேசுகிறபோது சொன்னார், அண்ணன் ஆர்க்காட்டார் அவர்கள், தலைவர் கலைஞருக்கு எப்படி துணையாக இருந்தாரோ, அதேபோன்று இன்றைக்கு நமக்கெல்லாம் அவர் துணையாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், ஒரு வருடம் எனக்கு பக்கபலமாக இருந்து, ஒவ்வொரு நாளும் அவர் பல அறிவுரைகளை ஆலோசனைகளை எனக்கு வழங்கியிருக்கிறார். எங்கே என்று கேட்டால், சிறைச்சாலையில்!

1976இல் நாங்கள் எல்லாம் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்த போது அண்ணன் ஆர்க்காட்டார் அவர்களும் எங்களோடு இருந்தார்கள். சிட்டிபாபு அவர்கள் எந்த அளவிற்கு கொடுமைகளுக்கு எல்லாம் ஆளாக்கப்பட்டார்கள் என்பது உங்களுக்கு தெரியும். அவர் மறைவதற்கு என்ன காரணம் என்பதும் உங்களுக்குப் புரியும். அதைப்பற்றி எல்லாம் இந்த மணவிழா நிகழ்ச்சியில் நாம் பேச விரும்பவில்லை. அப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் சென்னை சிறைச்சாலையில் நடைபெற்றது.

அந்தக் கொடுமைகளிலும் சிக்கித் தவித்தவர்தான் அண்ணன் ஆர்க்காட்டார் அவர்கள். அதைப்பற்றி எல்லாம் கொஞ்சம் கூட கவலைப்படாமல், இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும் என்றால், நான் சிறையில் நிம்மதியாக தெம்போடு திராணியோடு இருந்தேன் என்று சொன்னால், அதற்கு அண்ணன் ஆர்க்காட்டார் அவர்கள்தான் காரணமாக இருந்தார் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன்.

### ஆர்க்காட்டாரின் வழிகாட்டுதல்கள்!

இன்றைக்கும் என்னுடைய கையில் மிசா தழும்பு இருக்கிறது. அதேபோன்று அண்ணன் ஆர்க்காட்டார் அவர்கள் இன்றைக்கும் ஒரு காது கேட்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. சிறையில் பட்ட அந்தக் கொடுமையின் காரணத்தினால்தான் அந்த நிலைக்கு அவர் ஆளாக்கப்பட்டார். எனவேதான் தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணன் ஆர்க்காட்டார் அவர்களைப் பற்றி அடிக்கடி சொல்வதுண்டு, “வைரம் பாய்ந்த ஒரு தொண்டன்” அண்ணன் ஆர்க்காட்டார் என்று பலநேரங்களில் சொல்லியிருக்கிறார். தலைவரிடத்தில் மட்டுமல்ல; பொதுச்செயலாளராக இருந்த மறைந்த நம்முடைய பேராசிரியர் அவர்களிடத்திலும் நன்மதிப்பைப் பெற்றவராக விளங்கியவர் நம்முடைய அருமை அண்ணன் ஆர்க்காட்டார் அவர்கள்.

அவர் பொருளாளர் பொறுப்பை எப்படி வகித்தாரோ, அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டு பொருளாளராக இருந்தேன். அந்தப் பொருளாளர் பதவியில் இருந்து இன்றைக்கு உங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற இந்த இயக்கத்தின் தலைமைத் தொண்டன் என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இன்றைக்கு நான் பொறுப்பை ஏற்றிருக்கிறேன் என்று சொன்னால், அதெல்லாம் அவருடைய வழிகாட்டுதலின்படிதான்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்